விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 338 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 06 சனிக்கிழமை (22.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






### - வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் -
# உணர்வெழுச்சியுடன்
# மாவீரர் வாரம் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமானது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் சைக்கிளில் சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் துவிச்சக்கர வண்டியில் சென்ற நபர் ஒருவர் மயங்கி விழுந்து

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் மூச்செடுக்க சிரமப்பட்ட பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

இத்தாலியில் இருந்து

15ஆம் பக்கம் பார்க்க

### குருநகரில் மாணவர்களுக்கு விநியோகிக்க இருந்த
## ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்பு நால்வர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் நால்வர் யாழ்பபாணப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்

16ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர்களின் நினைவாலயம் நல்லூரில் நேற்று அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

தாய் மண்ணின் விடியலுக்காக வித்தாகிப்போனவர்களின் நினைவாலயம் நல்லூரில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு அங்குரார்ப்



15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசாங்கத்துக்கு எதிராக நுகேகொடையில் எதிர்ப்புப் பேரணி



15ஆம் பக்கம் பார்க்க

### பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில்
## பாம்பு தீண்டிய நிலையிலும் உ/த பரீட்சை எழுதிய மாணவன்

(யாழ்ப்பாணம்)

பாம்பு தீண்டிய நிலையிலும் மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொண்டு, மருத்துவக் கண்காணிப்பின் கீழ் மாணவன் ஒருவர் க.பொ.த உயர்தரப் பரீட்சையை எழுதிய நெகிழ்ச்சியான சம்பவம் ஒன்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

நாடு முழுவதும் க.பொ.த

15ஆம் பக்கம் பார்க்க

## தரம் 6க்கு மாணவர்கள் அனுமதி
### வெட்டுப்புள்ளி வெளியானது

(கொழும்பு)

2025ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்

15ஆம் பக்கம் பார்க்க

## வயிற்று வீக்கம், காய்ச்சல் இளம் குடும்பஸ்தர் மரணம்
### கைதடி மத்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வயிற்று வீக்கம், காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் கைதடி மத்தியைச் சேர்ந்த சுந்தரம் விக்னேஸ்வரன் (வயது-46) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

15ஆம் பக்கம் பார்க்க

### புன்னாலைக்கட்டுவனில்
## குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் அச்செழுப் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 56 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு அடித்துப்

04ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு விழா

## செல்வி தம்பு வளர்மதி



### சேவை விபரம்

கிளி/பளை மத்திய கல்லூரி
16.03.1990-24.01.1994

கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை
25.01.1994-14.07.2009

யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயம்
15.07.2009-08.01.2017

யா/திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை
09.01.2017-22.11.2025

எமது பாடசாலையில் தம் ஆசிரிய சேவைதனை பாங்குடனே நிறைவேற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எம் ஆசிரியப் பெருந்தகையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை

(C-4390)

# சேவை நலன் பாராட்டு விழா

## திருமதி பாமா கண்ணதாசன்



### சேவை விபரம்

யா/வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
21.03.1990-30.08.1995

யா/சென் யோசப் ஆண்கள் பாடசாலை
01.09.1995-07.01.1996

கிளி/கனகாம்பிகைக்குளம் G.T.M.S
08.01.1996-01.09.1997

முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம்
02.09.1997-04.02.1999

யா/திருநெல்வேலி R.C.T.M.S
05.02.1999-11.05.2010

யா/கல்வியங்காடு இ.த.க பாடசாலை
12.05.2010-01.10.2020

யா/நல்லூர் சென் பெனடிக் R.C.T.M.S
02.01.2020-25.05.2023

யா/திருநெல்வேலி R.C.T.M.S
26.05.2023-24.09.2025

எமது பாடசாலையில் தம் ஆசிரிய சேவைதனை பாங்குடனே நிறைவேற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எம் ஆசிரியப் பெருந்தகையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை

(C-4391)

விராட் விஸ்வ பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 04.02.1938 | 15.11.2025 |



## திருமதி.நவநீதபரஞ்சோதி (கிளி) சிவராசா

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.நவநீதபரஞ்சோதி சிவராசா அவர்கள் (15.11.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு-சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான விஷ்னுகாந்தி, ரூபவதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவராஜாவின் அன்பு மனைவியும், நிர்மலகுமாரி, காலஞ்சென்ற கோபிநாதன், இரவீந்திரநாதன் (Holland), சிவரஞ்சன் (Holland), குலதாஸ் (Swiss), நவீனகுமாரி (Holland) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்ப்பராசா, சயந்தினி (Holland), மகேஸ்வரி (Holland), இராஜசுலோசனா (Swiss), சிவராசா (Holland) ஆகியோரின் பாசமிகு மாமியும், தர்சினி-திஷாந் (Swiss), அஜந்-கீர்த்தி (ஜேர்மன்), அனித்-ஹசிந்தா (Holland), றிசிக்கா, நவானி, நவீத், சரண்யா, சயானா, மிதுனன், சிந்துஜா, ஆர்ஜன் ஆகியோரின் பேர்த்தியும் வைஷ்னவி, ருத்திரவேல் (Swiss) ஆகியோரின் பூட்டியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(5982)

இல.91, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
T.P: 077 188 2152, 078 112 3555

# பருத்தித்துறை வைத்தியசாலையில் சாரதி, பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய மர்மநபர் கைது

## கைப்பற்றப்பட்ட கத்தியால் புதிய சந்தேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் சந்தேகத்துக்கு இடமான முறையில் நுழைத்த நபரொருவர் அங்கு அம்புலன்ஸ் சாரதி, கடமையில் இருந்த பொலிஸாரை தாக்கியநிலையில் மடக்கிப்பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

பொலிஸ் நிலையத்தில் குறித்த சந்தேகநபரது உடைமைகளைச் சோதனை செய்ததில் அவரது பையில் கத்தி ஒன்றினை மறைத்து எடுத்து வந்திருப்பது தெரியவந்துள்ளது.

நேற்று (21) இரவு இடம் பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கரவெட்டியை சேர்ந்த இளைஞன் ஒருவர் தற்கொலைக்கு முயன்ற நிலையில் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு நேற்று (21) மாலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இரவு 7.00 மணியளவில் நபர் ஒருவர் வைத்தியசாலைக்குள் பிரவேசித்து குறித்த இளைஞனது விபரத்தைக் கூறி அவசர சிகிச்சைப் பிரிவு எங்கே உள்ளது என அங்கு நின்ற அம்புலன்ஸ் சாரதியிடம் கேட்டுள்ளார்.

அவரது நடவடிக்கையில் சந்தேகமடைந்த அம்புலன்ஸ் சாரதி தனக்கு தெரியாது எனக் கூறியுள்ளார். இதனால் கோபமடைந்த குறித்த நபர் வைத்தியசாலையில் வேலை செய்யும் உனக்குத் தெரியாதா? எனக் கேட்டவாறு சாரதி மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் குறித்த நபரை விசாரித்த போது பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதையடுத்து பொலிஸார் அவரை மடக்கிப்பிடித்து கைவிலங்கிட்டு பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப் படைத்தனர்.

இதன்போதே அவர் கத்தியை உடைமையில் மறைத்துவைத்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

தற்கொலைக்கு முயன்ற இளைஞனைப் பார்ப்பது போன்று சென்று மறைத்து எடுத்துவந்த கத்தி மூலம் தாக்குவதற்கு வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில் சம்பவம் தொடர்பில் நெல்லியடி, பருத்தித்துறை பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளை மட்டுமே அனுபவிக்கும் சில அதிகாரிகளால் வடக்கு பின்னடைவு

## விசனம் வெளியிட்ட ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

**நாங்கள் கோரும் நிதியை விடுவிப்பதற்கு மத்திய அரசாங்கம் தயாராக உள்ளது. ஆனால், வடக்கு மாகாண நிர்வாகத்திலுள்ள ஒரு சில செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் மக்களுக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு விருப்பமின்றி, வெறும் சலுகைகளை அனுபவிப்பதில் மட்டுமே குறியாக உள்ளனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கடும் விசனம் வெளியிட்டார்.**

கிளிநொச்சி, புதுமுறிப்புக் கிராமத்தில் மக்கள் நலன்சார் பணிகளை ஆற்றிவரும் "பத்ம லோக – மனிதவள சிறப்பாற்றல் நிறுவனத்தின்" 10ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை புதுமுறிப்பு விக்னேஸ்வரா கல்லூரியில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நான் நிர்வாகச் சேவையில், ஆளுநராகப் பதவியேற்ற பின்னரே மாகாண நிர்வாகத்தினுள் நுழைந்தேன். மாகாண நிர்வாகம் இவ்வளவு பின்னடைவைச் சந்திக்கக் காரணம், பொறுப்பிலுள்ள சில அதிகாரிகளே.

இவர்கள் பதவிகளையும் கதிரைகளையும் பிடித்து வைத்துக்கொண்டு, மக்கள் சேவையாற்றாது காலத்தை ஓட்டுகின்றனர். மக்களின் வரிப்பணத்தில் வழங்கப்படும் சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகளை எவ்வித தயக்கமும் இன்றிப் பெற்றுக்கொள்ளும் இவர்கள், அந்த மக்களுக்குச் சேவையாற்ற மட்டும் விரும்புவதில்லை. இத்தகைய சுமைகளையும் சுமந்துகொண்டே நாம் பயணிக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் அரசியல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பல கிராமங்கள் அபிவிருத்தியிலிருந்து புறக்கணிக்கப்பட்டன. ஆனால், தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், "பின்தங்கிய கிராமம் என்று எதுவும் இருக்கக் கூடாது" என்ற உறுதியான நோக்கோடு செயற்பட்டு வருகிறது.

எமது மாகாணத்துக்கு முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அபிவிருத்தி வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால், இந்த நன்மைகள் மக்களைச் சென்றடைவதற்கு எமது அதிகாரிகளே முட்டுக்கட்டையாக இருப்பது வேதனையளிக்கிறது.

சில சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது மக்களின் அவலநிலையை ஒரு முதலீடாகக் காட்டித் திட்டங்களைத் தீட்டி நிதியைப் பெறுகின்றன. ஆனால், அப்படிப் பெறப்படும் நிதியில் மக்களுக்கான உதவிகளை விட, அந்த நிறுவனங்களின் நிர்வாகச் செலவுகளுக்கே பெரும் பகுதி செலவிடப்படுகிறது.

இதனால் மக்களின் வாழ்வாதாரத்தில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை.

மாறாக, மக்களின் வாழ்வியலோடு ஒன்றிணைந்து, அவர்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதைப் புரிந்து கொண்டு, தொண்டு அடிப்படையில் பணியாற்றும் "மனிதவள சிறப்பாற்றல் நிறுவனம்" போன்ற அமைப்புகளே எமக்குத் தேவை என ஆளுநர் தெரிவித்தார். (நி)

# அயகமவில் அசிட் வீச்சு

## தாய் உயிரிழப்பு, பிள்ளைக்கு காயம்

(இரத்தினபுரி)

அயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அசிட் வீச்சில் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த பகுதியில், தாய் ஒருவரும் அவரது 16 வயது பிள்ளையும் அசிட் வீச்சில் பலத்த காயமடைந்துள்ளதாக அயகம பொலிஸாருக்கு தகவலொன்று கிடைத்துள்ளது.

அதற்கமைய, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார், குறித்த தாயையும் பிள்ளையையும் அயகம வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதன்போது குறித்த தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் கொழும்பு - கவரகிரிய பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் என தெரிய வந்துள்ளது.

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறினால், இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களைக் கைதுசெய்ய அயகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# நயினாதீவு கடற்போக்குவரத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

## வேலணை பிரதேச சபையிடம் வலியுறுத்து

(அராலி)

நயினாதீவின் கடற் போக்குவரத்தில் இருக்கும் இடர்பாடுகளை களைந்து மக்களுக்கு பாதுகாப்புடன் கூடிய இயல்பான போக்குவரத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேலணை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இவ்விடயம் குறித்து உறுப்பினர் கார்த்தீபனால் சபையில் முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குறிகாட்டுவான் நயினாதீவு இடையேயான கடற்போக்குவரத்து சேவையை சீரமைப்பது அவசியமாகும்.

குறிப்பாக நாளாந்தம் ஆயிரக்கணக்கான பயணிகளின் போக்குவரத்து மார்க்கமாக இருக்கும் இந்த படகுப் போக்குவரத்து சேவையை தனியார் முன்னெடுத்து வருகின்றனர். சுமார் 45 படகுகள் சேவையை முன்னெடுக்கின்றன.

ஆனால் குறித்த சேவையை முன்னெடுக்கும் படகுகள் சங்கம் சட்டபூர்வமான ஒன்றல்ல. அத்துடன் படகுகளும் சேவைக்கு உகந்த தரத்தில் இருப்பதில்லை என்றும், அவை தரச் சான்றிதழ் எடுக்காது சேவையை முன்னெடுக்கின்றன என்றும் குற்றச்சாட்டுக்கள் வலுவாக இருக்கின்றன. மேலும் பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணம், படகுச் சேவைக்கான வரி உள்ளிட்டவையும் முறையாக அறவிடப்படுவதாக தெரியவில்லை.

எனவே படகுகளின் தரம், கட்டண அறவீடு, வரி அறவீடு, சங்கம் மற்றும் படகுகளின் பதிவுகள் என்பவற்றை ஒரு முறையான பொறிமுறையை உருவாக்கி மக்களுக்கான போக்குவரத்து சேவையை பாதுகாப்பானதாக முன்னெடுக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

குறித்த விடயத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்ட சபையின் உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களை முன்வைத்த நிலையில் அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வேறு இடங்களில் இருந்து வரும் படகுகளுக்கும் வரி அறவீடு செய்யப்படும் என்றும் தவிசாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது (நி-104)

# ரணில் விக்கிரமசிங்க சென்னை விஜயம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சென்னை நோக்கிப் புறப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்கிரமசிங்கவும் இந்தப் பயணத்தில் அவருடன் இணைந்து கொண்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காகவே அவர் இந்தியாவின் தமிழ்நாட்டுக்கு புறப்பட்டுள்ளார்.

இதேவேளை தமிழ் நாட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில முக்கிய இரகசிய சந்திப்புக்களில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# திரிபோசாவுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள பல மகப்பேறு மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளில் திரிபோசாவுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவ தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் இந்தத் தட்டுப்பாடு காரணமாக, திரிபோசா குறிப்பிட்ட சில பிரிவினருக்கே வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி தற்போது மூன்று வயதுக்கு மேற்பட்ட மிகக் கடுமையான போஷாக்குக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, அத்துடன் இரும்புச் சத்து குறைபாடுள்ள தாய்மார்கள் மற்றும் குறைந்த எடையுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு மட்டுமே திரிபோஷா வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பல் வருடங்களாக மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு திரிபோசா வழங்கப்படவில்லை என்றும், இந்தத் திட்டம் மீண்டும் தொடங்கப்படும் என அதிகாரிகள் அறிவித்த போதிலும், இதுவரை அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டதாகவும் வைத்தியர் சஞ்சீவ தெரிவித்தார். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுச் செய்திகள்

## முத்தரப்பு ரி-20 தொடர்

# இலங்கையை வீழ்த்தி சிம்பாப்வே அபார வெற்றி!

**முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தி சிம்பாப்வே அணி அபார வெற்றி பெற்றுள்ளது.**



பாகிஸ்தான், இலங்கை மற்றும் சிம்பாப்வே கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2 ஆவது லீக் ஆட்டத்தில் இலங்கை, சிம்பாப்வே அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது. பென்னட் 49 ஓட்டங்களிலும், சிக்கந்தர் ராசா 47 ஓட்டங்களிலும் ஆட்மிழந்தனர்.

இலங்கை சார்பில் வனிந்து ஹசரங்கா 3 விக்கெட்டும், ஈஷான் மலிங்கா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. சிம்பாப்வே அணியினர் துல்லியமாக பந்து வீசி அசத்தினர். சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்தன. இறுதியில், இலங்கை அணி 20 ஓவரில் 95 ஓட்டங்களுக்கு ஆட்ட மிழந்தது

சிம்பாப்வே சார்பில் பிராட் ஈவன்ஸ் 3 விக்கெட்டும், ரிச்சர்ட் நகரவா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகன் விருது சிம்பாப்வே அணியின் சிக்கந்தர் ராசாவுக்கு அளிக்கப்பட்டது.

முத்தரப்பு தொடரில் சிம்பாப்வே தான் ஆடிய 2 போட்டிகளில் ஒரு வெற்றி, ஒரு தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## குடும்பஸ்தர் ...

படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை புன்னாலைக் கட்டுவனில் உள்ள கள்ளுத் தவறனை ஒன்றில் கள்ளு அருந்துவதற்கு சென்ற நிலையில் தவறணையில் கள்ளு அருந்திக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் குறித்த குடும்பஸ்தரை தாறுமாறாகத் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## உணர்...

தமிழர்களின் உரிமைக்காக தமிழீழ இலட்சியத்துக்காக போராடி வீரகாவியமான மாவீரர்களை நினைவு கூர்ந்து தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் நவம்பர் 21 முதல் 27 வரை மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன. பல இடங்களில் சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகள் பறக்கவிட்டு, மாவீரர்களுக்கான பாடல்கள் ஒலிக்க விடப்பட்டுள்ளன. அத்துடன் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

அதன்படி, யாழ்ப்பாணம் - கோப்பாய் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது.

கோப்பாய் துயிலுமில்லம் காணப்பட்ட பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ள நிலையில் அதன் வாயிலில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தவர்களின் தற்போதைய கல்லறை அமைந்துள்ள இடத்தில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். பல்கலைக் கழகத்திலும் நினைவேந்தல் நடைபெற்றது.

மேலும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையிலும் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேசசபை, வலி.வடக்கில் தெல்லிப்பழைச் சந்தியிலும் புதுக்குடியிருப்பிலும் நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

மேலும் மட்டக்களப்பு, மண்முனை தென்மேற்குப் பிரதேசசபை கலாசார மண்டபத்திலும் நினைவேந்தல் நடைபெற்றது.

கிரான், கோரகல்லிமடு விசேட தேவையுடையோர் மண்டபத்திலும் விசேட நினைவேந்தல்கள் இடம்பெற்றிருந்தன. (ம-7)

## மே.தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து!

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி 5 ரி-20, 3 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

முதலில் நடைபெற்ற ரி-20 தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது. அடுத்து, நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

இந்நிலையில், இரு . அணிகளுக்கு இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி கடந்த புதன் கிழமை நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 34 ஓவராகக் குறைக்கப்பட்டது.

அதன்படி, முதலில் ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 34 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 247 ஓட்டங்கள் எடுத்தது. ஷாய் ஹோப் சதமடித்து அசத்தினார். அவர் 69 பந்துகளில் 109 ஓட்டங்கள் குவித்தார்.


அடுத்து களமிறங்கிய நியூசிலாந்து 33.3 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 248 ஓட்டங்கள் குவித்தது. இதன்மூலம் மேற்கிந்திய தீவுகளை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி நியூசிலாந்து அபார வெற்றிபெற்றது. டேவான் கான்வே 90 ஓட்டங்கள் சேர்த்தார். இந்த வெற்றியின் மூலம் 2-0 என ஒருநாள் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது. ஆட்ட நாயகன் விருது ஷாய் ஹோப்புக்கு அளிக்கப்பட்டது.

இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
29
.
08
.
1960

மறைவு
17
.
11
.
2025

## அமரர்.இராசையா நகுலேஸ்வரன் (நவம்)

அளவெட்டி தெற்கு அடுவம்பற்றைப் பிறப்பிடமாகவும் சுவிஸ், நெதர்லாந்து (Maastricht) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராசையா நகுலேஸ்வரன் அவர்கள் கடந்த 17.11.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா-நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தம்பிராசா-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், செந்திருமதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கோபால்ராஜா, சிவசுப்பிரமணியம், நித்தியானந்தம் மற்றும் நவரெட்ணராஜா (லண்டன்), சரோஜினி (பிரான்ஸ்), பாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மலர் (கொழும்பு), சரோஜினிதேவி, கலைமதி, திருவருட்செல்வம், காலஞ்சென்ற சிறிஸ்கந்தராஜா மற்றும் அருந்தவதேவி, கமலேஸ்வரி, நிர்மலாதேவி, சத்தியநாதன், மாலதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை நெதர்லாந்து (Maastricht) இல் நடைபெறவுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(5986)

செந்திருமதி (மனைவி) +31623041465
சரோஜினி (சகோதரி) +33651548246
பாஸ்கரன் (சகோதரன்) +41765314539

தகவல்:
த.திருவருட்செல்வம் குடும்பம்
077 667 9557


# சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மூலஸ்தான பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம் பெறவுள்ளதென ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ.து விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.10.2025 வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

## பேரம்பலம் கந்தசாமி


அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள்
இன்று 22.11.2025 சனிக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில்
நடைபெறவிருப்பதால் அத்தருணம்
தாங்களும் குடும்ப சகிதம்
வருகை தந்து அன்னாரின்
ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(1725)

தகவல்:
குடும்பத்தினர்

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
10.08.1936

விண்ணில்
17.11.2020

தொழிலதிபர்

அமரர்.கந்தன்–வேலன்–முத்தன்

## மாணிக்கம் வேலும்மயிலும்

(உரிமையாளர்,ஈஸ்வரி அரிசி ஆலை – எள்ளங்குளம் – சமரபாகு)

கார்த்திகை வளர்பிறை 3 ம் நாள் (22.11.2025)

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழி நடத்த வணங்குகிறோம்....

நீங்கா நினைவில்

மனைவி(ஈஸ்வரியம்மா), பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

விமலாதேவி - தங்கராசா, வசந்தாதேவி - அருந்தவராசா(கனடா),
விஜயாதேவி - கார்த்திகேசு, லிங்கேஸ்வரன் - வதனா(சுவிஸ்),
லிங்கராணி - சிவநேசன்(கனடா), தயாநிதிதேவி - விவேகானந்தன்(சுவிஸ்)
நேசலிங்கம் - நிரோஜினி, குணசுந்தரம் - வதனா(கனடா),
தமேந்தினி - நிசந்தன்(கனடா), வீரரூபன் - பவித்திரா (மருத்துவர் - மந்திகை ஆதார வைத்தியசாலை), கௌசலா - காந்தரூபன்(பிரான்ஸ்),
கல்பனா - அந்தணன்(கனடா), நிறைஞ்சனா - நவநீதன்(கனடா)

"ஈஸ்வரி இல்லம்"
சாய்பாபா மருத்துவ நிலையம், சமரபாகு, வல்வெட்டித்துறை.

(5983)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாவீரர் வாரம் ஆரம்பம்

## தமிழர் தாயகமெங்கும் அஞ்சலி நிகழ்வுகள்


மாவீரர் வாரம் நேற்று ஆரம்பித்துள்ள நிலையில் தாயகப் பரப்பிலும், புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


யாழ்.பல்கலைக்கழகம்


சாட்டி


முரசுமோட்டை


கொழும்பு


உடுத்துறை


வவுனியா

# 33 வருடங்களின் பின் வழங்கப்பட்ட காணி உறுதிப்பத்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீடுகளுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் 33 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வீடமைப்பு நிர்மாண மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் வைத்தியர் சுசில் ரண



சிங்ஹவால், குருநகர் பகுதியை சேர்ந்த 19 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. (நி-33)

## பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பகிரங்க ஏலவிற்பனையானது இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில், 79 துவிச்சக்கர வண்டிகள், தகர பரல்கள் மற்றும் பிளாஸ்ரிக் கொள்கலன்கள் என்பன விற்பனை செய்யப்படவுள்ளதென நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (3)

## உடுவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 26 வயது இளைஞன், 1 இலட்சத்து 80ஆயிரம் மில்லிலீற்றர் கோடாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-104)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனித வள முகாமைத்துவ வருகை தரு விரிவுரையாளர்கள் மற்றும் ஒப்படை திருத்துநர் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான துறைசார் கல்வியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் 070 361 6177 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அறிவித்துள்ளனர். (3)

## பொதுக் கூட்டமும் நிர்வாகசபை தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யா/ திருநெல்வேலி தெற்கு, பரமேஸ்வராச் சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பரிபாலன சபைத் தலைவர் பொ. சேகராஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளனர். (3)


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை:** மானிப்பாய் கிராம உப அலுவலகம்

**விண்ணப்பதாரரின் பெயர்:** கலாதரன் பெண் கமலநந்தினி

**ஆதன இல:** 16/39 (பகுதி) **வீதி:** புளியங்கண்டு பிள்ளையார் வீதி **வட்டாரம்:**07

வட்டாரம் 07, புளியங்கண்டு பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள, வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "புளியங்கண்டு வளவு" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனத்தை வேலுப்பிள்ளை செல்லத்துரை, வேலுப்பிள்ளை ஆனந்தகுமார் ஆகியோர் தமது மாதாவழி முதுசமும் ஆட்சியுமுடையது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா எழுதிய 2021.08.20 ஆம் திகதிய 9504 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு பெண் கொங்காதேவிக்கு வழங்கியுள்ளனர். மேலும் குறித்த ஆதனம் இதே நொத்தாரிசு முகதாவில் எழுதிய 2021.08.20 ஆம் திகதிய 9505 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் கந்தையா கலாதரன் பெண் கமலநந்தினிக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் சி.எஸ்.லியனகே அவர்களால் வரையப்பட்ட **3413** ஆம் இலக்க **2025.06.04** ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 01 குளி; 14.22 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு - வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு பெண் கொங்காதேவி
கிழக்கு -கந்தர் விஸ்வலிங்கம் பெண் மாரிமுத்து
தெற்கு- சித்தர் காசிநாதன்
மேற்கு -ஒழுங்கை

மேற்குறித்த ஆதனத்தை கந்தையா கலாதரன் பெண் கமலநந்தினி என்ற பெயரில் சபையின் ஆதனப் பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரில் ஆதனப் பதிவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(5984)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

மனவளக் கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மன வளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்ப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

குறித்த பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக் கலை பேராசிரியர் ரி. காஞ்சிநாதன் வழங்குவார். அத்துடன் மேலதிக தகவல்களுக்கு 076 857 1395 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# மணிவிழா வாழ்த்து



Wish You All the Best

## திரு. குமாரசாமி தயாபரன்

**சேவை விபரம்**

- நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் - 1998.08.05 - 2000.12.28
- யா/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம் - 2000.12.29 - 2004.08.31
- யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் - 2004.09.01 - 2021.01.31
- யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் -2021.02.01 - 2025.11.21

(5966)

இன்று தனது சேவையை நிறைவு செய்து மணிவிழாவைக் கொண்டாடுகின்ற
எமது பாடசாலை பணியாளர் குமாரசாமி தயாபரன்
அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு
அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையப் பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்– பாடசாலைச் சமூகம்,
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**134, பிரான்பற்று வீதி, வட்டாரம் - 05**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05, பிரான்பற்று வீதியிலுள்ள இல 134 ஆகிய ஆதனம் எனது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் V. கிருஷ்ணபகவான் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை சின்னதம்பி பூரணசற்குணம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10451/12.03.1975ஆம் இலக்க உறுதியால் முருகேசு சின்னத்தம்பி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

வயித்திலிங்கம் இராசகுலசிங்கம் ஆகியவர் மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் 12040/11.04.1979ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னத்தம்பி பூரணசற்குணமும், வேலுப்பிள்ளை டானியேல் ஐயாத்துரையும் பெண் ஞானம்மாவும், வேலுப்பிள்ளைந்தானியேல் ஐயாத்துரையும் பெண் பரஞ்சோதிஅம்மாவும், எட்வின் விக்ரர் ஜெயரத்தினசிங்கம், கென்ஸ்மனும் பெண் கிருபையும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சிவசோதி சிவகொங்காதரன் பெண் ஜெயந்தி ஆகியவர் மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை பிரசித்த நொத்தாரிசு மு.க சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 16171/11.05.1998ஆம் இலக்க உறுதியால் குறித்த வயித்திலிங்கம் இராசகுலசிங்கமும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "மாலியாவத்தை"
இறை: சங்கானை கிழக்கு
வீஸ்தீரணம்: நில.பர.இலா 03
எல்லைகள்: கிழக்கு - ஒழுங்கை, வடக்கு- மிகுதிக் காணி, மேற்கும் தெற்கும்- றோட்டு

குறித்த சிவசோதி சிவகொங்காதரன் பெண் ஜெயந்தி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவசோதி சிவகொங்காதரன் பெண் ஜெயந்தி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**223/81, தேவாலய வீதி, வட்டாரம் - 01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, தேவாலய வீதி, இல 223/81 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை செல்லத்துரை கிருபைராஜா பெண் செல்வமணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு S.சிவஞானம் முகதாவில் 1855/12.09.1955ஆம் இலக்க உறுதியால் குறித்த கந்தையா கைம்பெண் பரிபூரணமும், சபாபதிப்பிள்ளை பொன்னையாவும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை குறித்த செல்லத்துரை கிருபைராசாவும் பெண் செல்வமணியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1180/04.11.1981 ஆம் இலக்க உறுதியால் பொன்னம்பலமும் சிற்றம்பலமும், பொன்னம்பலம் இராசரத்தினமும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

நல்லதம்பி செல்வராசாவும் பெண் பத்மாவதியும் ஆகியவர்கள் குறித்த ஆதனங்களினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு மு.சபாநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1184/08.11.1981ஆம் இலக்க உறுதியால் குறித்த செல்வத்துரை கிருபைராசாவும் பெண் செல்வமணியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப்பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த செல்வராசா பெண் பத்மாவதி காலஞ்செல்ல, குறித்த ஆதனத்தில் அவருக்குரிய பங்கு அவரது கணவரான நல்லதம்பி செல்வராசா ஆகியவருக்கு தாரப்பங்கும், தேடிய தேட்டமாகவும், அவரது பிள்ளைகளான செல்வராசா ஈஸ்வரனும், செல்வராசா தயாபரனும், செல்வராசா தேவராசாவும் ஆகியவர்களுக்கு மாதாவழி முதுசமாகவும் வந்தடைந்தது.

முருகையா ஹரன் மனைவி மஞ்சுளா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6394/09.07.2010ஆம் இலக்க உறுதியால் குறித்த நல்லதம்பி செல்வராசாவும், செல்வராசா ஈஸ்வரனும், செல்வராசா தயாபரனும், செல்வராசா தேவராசாவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

கோணாமலை கலைச்செழியன் மனைவி வனஜா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6395/09.07.2010ஆம் இலக்க உறுதியால் குறித்த நல்லதம்பி செல்வராசாவும், செல்வராசா ஈஸ்வரனும், செல்வராசா தயாபரனும், செல்வராசா தேவராசாவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் மற்றொரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

பொன்னம்பலம் சசிகரனும், கலைச்செழியன் மனைவி வனஜாவும், முருகையா ஹரன் மனைவி மஞ்சுளாவும் ஆகியவர்கள் மேற்படி ஆதனங்களானவை உறுதிப்படி நிந்தமான ஆதனங்களாக உள்ள போதும், முறையாக அளப்பனவு செய்து எல்லைகள் வைக்கப்படவில்லை எனவும், அவ்வாறு இருப்பதால் தமக்கு பலவித பிரச்சினைகள் ஏற்படுவதால் தாங்கள் மனமொத்து நில அளவையாளர் K.A.இளையதம்பி அவர்கள் மூலம் தத்தமது ஆதனங்களை அளந்து எல்லையிட்டு பிரிவிட்டு கொள்வதாகக் குறிப்பிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவசுப்பிரமணியம் முகதாவில் 7708/19.12.2011ஆம் இலக்கத்தில் பிரிவிடல் உறுதியொன்றினை நிறைவேற்றி முறையே தத்தமது ஆதனங்களுக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

பொன்னர் செல்லையா மகள் ஜெயராணி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5959/12.04.2015ஆம் இலக்க உறுதியால் குறித்த முருகையா ஹரனும் பெண் மஞ்சுளாவும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

ஜெயரத்தினம் ஜெயப்பிரியனும் பெண் சிவதர்ஷினியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6325/22.11.2015ஆம் இலக்க உறுதியால் குறித்த கோணாமலை கலைச்செழியன் பெண் வனஜா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த கோணாமலை கலைச்செழியன் ஆகியவர், 6325/22.11.2015ஆம் இலக்க உறுதி நிறைவேற்றப்பட்ட சமயத்தில் தான் வெளிநாட்டில் வசித்திருந்ததாகவும், அதன் காரணமாக குறித்த உறுதியில் தனது கையொப்பத்தினை இட்டிருக்கவில்லை எனவும், எவ்வாறெனினும் குறித்த ஆதனத்தை அறுதி விற்க தனது பூரண சம்மதத்தை வெளிப்படுத்தவும், அதற்குரிய ஆவணத்தை நிறைவேற்றவும், தமது மைத்துனராகிய முருகையன் கரன் என்பவருக்கு அற்றோணி தத்துவப் பத்திரம் கொடுத்துள்ளதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 6503/17.02.2016ஆம் இலக்கத்தில் பெலப்படுத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார். எனினும் குறித்த அற்றோணித் தத்துவத்தில் குறித்த உறுதி நிறைவேற்றுவதற்கென வெளிப்படையான தத்துவம் எதுவும் காணப்படவில்லை.

நித்தியானந்தகுருக்கள் ஜெகானந்தனும் பெண் சுஜந்தினியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14438/01.04.2022ஆம் இலக்க உறுதியால் குறித்த பொன்னர் செல்லையா மகள் ஜெயராணியும், ஜெயரத்தினம் ஜெயப்பிரியனும் பெண் சிவதர்ஷினியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனங்களினை உள்ளடக்கிய ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "வெல்வில்"
இறை: சங்கானை இறை
விஸ்தீரணம்: நில.பர.இலா 3 குளி 7.56.
எல்லைகள்: கிழக்கு- நித்தியானந்தசர்மாவுக்கும், பவானந்தசர்மாவுக்குரிய ஆதனம், வடக்கு- ஒழுங்கை, மேற்கு - பாதை, தெற்கு- நில அளவையாளர் K.A.இளையதம்பி அவர்கள் 01.09.2011ஆம் திகதியில் தயாரித்த 420ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 4 எனச் சுட்டப்பட்ட பாகம்.

குறித்த நித்தியானந்தகுருக்கள் ஜெகானந்தனும் பெண் சுஜந்தினியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நித்தியானந்தகுருக்கள் ஜெகானந்தனும் பெண் சுஜந்தினியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(C-4382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஜி-20 மாநாட்டில் அமெரிக்கா பங்கேற்காது!

### வெள்ளை மாளிகை அறிவிப்பு




(வோஷிங்டன்)

தென் ஆபிரிக்காவில் நடக்கும் ஜி-20 மாநாட்டில் அமெரிக்கா பங்கேற்கவில்லை என வெள்ளை மாளிகை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

தென் ஆபிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் ஜி- 20 நாட்டு தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு நடைபெறுகிறது.

அது தொடர்பில் வெள்ளை மாளிகை தெரிவிக்கையில், தென் ஆபிரிக்கா ஜனாதிபதி சிரில் ராமபோசா அமெரிக்கரவைப் பற்றி எதிர்மறையாகப் பேசுகிறார். இதனை அமெரிக்க ஜனாதிப்தி ட்ரம்ப் உள்ளிட்ட எங்களது குழுவினர் ஏற்கவில்லை இதனால் ஜி- 20 மாநாட்டில் அமெரிக்கா பங்கேற்காது எனவும் வெள்ளை மாளிகையின் பத்திரிகைச் செயலாளர் கரோலின் லீவிட் தெரிவித்தார்.

இதேவேளை, ஏற்கனவே, "தென் ஆபிரிக்காவில் மனித உரிமை மீறல்கள் நடப்பதாகக் கூறி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஜி- 20 உச்சி மாநாட்டில் எந்த அமெரிக்க அதிகாரியும் பங்கேற்க மாட்டார்கள்" என்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வியட்நாமை புரட்டிப்

## வெள்ளத்தில் சிக்கி 4

(ஹனோய்)

**மத்திய வியட்நாமில் தொடரும் இடைவிடாத மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 41 பேர் உயிரிழந்துள்ளனர்.**

அதேநேரத்தில், அனர்த்தத்தில் சிக்குண்டு ஒன்பது பேர் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களைத் தேடும்



பணிகள் தொடர்வதாக வியட்நாம் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வெள்ளம் 52,000 இற்கும் மேற்பட்ட வீடுகளை மூழ்கடித்ததாகவும், அரை மில்லியன் வீடுகள், வணிகங்களுக்கான மின்சாரத்தை துண்டிக்க வழிவகுத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று நாட்களில் பல பகுதிகளில் மழைப் பொழிவு 1.5 மீற்றரை (5 அடி) தாண்டியது. சில பகுதிகளில் 1993 ஆம் ஆண்டு வெள்ள உச்ச நிலையான 5.2 மீற்றரைத் தாண்டியும் அதிகரித்துள்ளது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட

## ஐ.நா உச்சிமாநாட்டு அரங்கில் தீ ஓட்டம் பிடித்த சர்வதேச பிரதிநிதிகள்

(பிரேசில்)

ஐ.நா காலநிலை உச்சி மாநாடு இடம்பெற்ற பிரேசிலின் பெலெமில் உள்ள COP30 அரங்கிற்குள் பாரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலுமிருந்து பிரதிநிதிகள் குழு உறுப்பினர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் குறித்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்த நிலையில், இந்த தீ விபத்து ஏற்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், தற்போது தீப் பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பிரேசில் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவராத நிலையில், மின்சார கசிவினால் இது இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

தீப்பரவலை அடுத்து உடனடியாக மக்களை வெளியேற்ற சைரன்கள் ஒலித்தன. பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து கூட்டத்தைத் தடுக்க பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுத்தனர். பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் தங்கள் உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியே தப்பி ஓடினர்.

பின்னர், தீப்பரவலானது ஆறு நிமிடங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் உள்ளூர் தீயணைப்பு சேவை தெரிவித்துள்ளது. (நி)




## மிஸ் யுனிவர்ஸ் போட்டி மெக்சிக்கோ அழகிக்கு மகுடம்




(தாய்லாந்து)

இந்தாண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் அழகியாக மெக்சிகோ நாட்டை சேர்ந்த பாத்திமா போஷ், தேர்வு செய்யப்பட்டார்.


"மிஸ் யுனிவர்ஸ்" என்பது சர்வதேச நாடுகளை சேர்ந்த அழகிகள் கலந்து கொள்ளும் வருடாந்திர போட்டியாகும். இந்தாண்டுக்கான போட்டி, தாய்லாந்தில் உள்ள இம்பாக்ட் சேலஞ்சர் விடுதியில் நடைபெற்றது. 100 இற்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த அழகிகள் போட்டியில் கலந்து கொண்டனர்.

போட்டியின் இறுதி சுற்றில், மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த பாத்திமா போஷ் (வயது 25) வெற்றி பெற்று, 2025ஆம் ஆண்டு மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை தட்டிச் சென்றார். முதல் ரன்னரப் ஆக தாய்லாந்து அழகியும், இரண்டாம் ரன்னரப் ஆக வெனிசுலா அழகியும் தேர்வு செய்யப்பட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ப்போட்ட கனமழை ! 41 பேர் உயிரிழப்பு



பகுதிகளில் கடலோர நகரங்களான ஹோர்ய் ஆன் மற்றும் நாட்ராங் ஆகியவை அடங்கும்.


அதே போல் மத்திய மலைப்பகுதிகளில் உள்ள ஒரு முக்கிய கோப்பி உற்பத்திப் பகுதியும் அடங்கும் இங்கு விவசாயிகள் ஏற்கனவே புயல்களால் அறுவடை நின்றுவிட்டதால் தவித்து வருகின்றனர்.

அண்மைய மாதங்களில் வியட்நாம் மோசமான வானிலையால் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

கல்மேகி மற்றும் புவாலோய் ஆகிய இரண்டு புயல்கள் வார இடைவெளியில் பல உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தின.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரை வியட்நாமில் ஏற்பட்ட இயற்கை பேரழிவுகள் 2 பில்லியன் டொலர் அளவுக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. (நி)

# 236.4 டொலருக்கு ஏலம் போன ஓவியம்



(ஆஸ்திரியா)

ஆஸ்திரியாவை சேர்ந்த பிரபல ஓவியக் கலைஞர் குஸ்டாவ் கிளிம்ட் வரைந்த ஓவியத்தை அமெரிக்காவின் நியூயோர்க்கைச் சேர்ந்த சோதேபிஸ் ஏல நிறுவனம் ஏலம் விட்டது.

இதை ஏலம் எடுக்க 6 பேர் போட்டிபோட்டனர். இதில் அந்த ஓவியம் 236.1 அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போனது.

ஏலம் எடுத்தவரின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. இந்த ஏலம் 20 நிமிடங்களில் முடிந்தது. ஏல வரலாற்றில் 2 ஆவது அதிக பட்ச விலைக்கு விற்பனையான ஓவியம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஓவியம் 1911-1916 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் வரைந்ததாகும். இந்த ஓவியம் லிசபெத் லெடரர் என்ற பெண் வெள்ளை அங்கி அணிந்து நீல நிற திரைச் சீலையின் முன் நிற்பதைக் காட்டும் ஓவியமாகும்.

அந்த ஓவியத்தில் குஸ்டாவ் கிளிம்ட் தனது முக்கிய வாடிக்கையாளரின் மகளைச் சித்திரித்திருந்தார்.

இந்த ஓவியம் 2 ஆம் உலக போரின்போது நாஜி படைகளால் கொள்ளையடிக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. பின்னர் அந்த ஓவியம் 1948ஆம் ஆண்டு மீட்கப்பட்டது. (நி)

# போர் நிறுத்தத்தை மீறி காசா மீது இஸ்ரல் தாக்குதல்

## 28 பேர் உயிரிழப்பு





(காசா)

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததற்கு பின் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 280 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐநா பாதுகாப்பு கவுன்சில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் இஸ்ரேல் காசாவை தாக்கியுள்ளது.

காசா மீது நேற்று முன்தினம் மட்டும் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்துள்ளதாகக் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மத்தியஸ்தத்தில் கடந்த 5 வாரங்களுக்கு முன் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த போதும் இஸ்ரேல் காசா மீது தாக்குதலை தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் காசா நகர் மற்றும் கான் யூனிஸ் பகுதிகளில் இஸ்ரேலிய விமானப்படை குறிவைத்து வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.


ஹமாஸ் பயங்கரவாதிகள் தங்கள் நாட்டைத் தாக்கத் தயாராகி வருவதாக வந்த தகவலின் அடிப்படையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ட்ரம்ப்பின் அமைதி திட்டம் மூலம் சர்வதேசப் படைக்களை காசாவுக்கு அனுப்புவது குறித்து ஐநா பாதுகாப்பு கவுன்சில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில் இஸ்ரேல் காசாவை தாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்குவானையில் வெள்ளப்பெருக்கு அபாயம்



(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை, காரணமாக ஆங் காங்கே வெள்ள அபாயம் ஏற்பட்டு ள்ளதுடன் பலதாழ் நிலங்கள் நீரினால் நிரம்பி காணப்படுகின்றன.

இறக்குவானை நகரிலுள்ள பிரதான பேருந்துதரிப்பு நிலையம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை 5 மணி யளவில் திடீர் வெள்ளம் ஏற்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள், கடைகள் என்பன வெள்ள நீரினால் நிரம்பி காணப்ப டுகின்றன.

20 இற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் கடைகள் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் இந்த இடரனர்த்தம் காரணமாக பெரும் பொருட் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து மாலை வேளையில் பலத்த இடியுடன் கூடிய மழை பெய்து வருவதுடன் காலைவேளையில் கடுமையான பனிப்பொழிவும் காணப்ப டுகின்றன. மிகவும் தாழ் நிலப்பகுதியான இரத்தினபுரி நகரிலும் அதனை அண்டிய பகுதிகளில் வழமைக்கு மாறாக மிக கூடுதலான பனிப்பொழிவு காணப்படு கின்றன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998 - RC
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4 இல் சூரிசெவ்
உயரம் : 5'9"
தகைமை/தொழில்:HRM,Company (own)
எதிர்பார்ப்பு : படித்த தகுதியான பெண்
தொ.இ: B/16255

பிறப்பு: 1983 - இந்து
நட்சத்திரம்: கேட்டை 2இல் செவ்
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: A/L, லண்டன்
எதிர்பார்ப்பு : தகுதியானபெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16256

பிறப்பு:1987 - இந்து
நட்சத்திரம்: அனுசம் 7 இல் செவ்
கிபா- 68
உயரம் :5'7"
தகைமை/தொழில்: BSC,Lawyer
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16258

பிறப்பு :1995 - இந்து
நட்சத்திரம்: சுவாதி 7 இல் செவ்
கி.பா: 62
உயரம் : 5'8"
தகைமை/தொழில்: A/L,நேரக்கணிப்பாளர்
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16259

பிறப்பு:1990 -இந்து
நட்சத்திரம்: ரேவதி 7 இல் செவ்
உயரம் :5'7"
தகைமை/தொழில்- Lab Attendant
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவாகள்
தொ.இ: B/16263

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997 - இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 37 1/2
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: B.pharm,Demo
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16289

பிறப்பு -1995 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 21 1/4
உயரம் : 5'6"
தகைமை/தொழில் -O/L, Programme Opearator
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/16297

பிறப்பு-1993 - இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 12 இல் சூரி செவ்
கிபா-41 1/2
உயரம் : 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு : நிரந்தரவேலை
தொ.இ: G/16275

பிறப்பு-1992 - இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2 இல் செவ்
கி.பா: 33 1/4
உயரம் : 5'3"
தகைமை/தொழில்:BBM,முகாமையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,விவாகரத்தானவர்கள்
தொ.இ: G/16260

பிறப்பு-1988 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கிபா-37
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Degree, Teacher (Australia)
எதிர்பார்ப்பு : பட்டதாரி,உத்தியோகம்
தொ.இ: G/15003

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 489

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# நம்பிக்கையே குரு...

"மாருபா" என்று ஒருத்தர். திபெத் நாட்டிலே இருந்தார். அவர் ஒரு எளிமையான ஆசாமி! அவருக்கு ஞான மார்க்கத்திலே போக வேண்டும் என்று ஆசை. அதனாலே ஒரு குருவைத்தேடிப் போனார்.

"குருவே! நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க!" என்றார்.

"எப்போ என்னிடம் நீ சரணாகதி அடைந்துவிட்டாயோ இனிமேல் உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை நீ செய்ய வேண்டியது வேறு ஒன்றும் இல்லை என்னைப் பரிபூரணமாக நம்பு.

என்னுடைய பெயர்தான் உனக்கு மகா மந்திரம். எந்தக் கஷ்டம் வந்தாலும் என் பெயரைச் சொல்லு சரியாகிவிடும் என்றார் குரு.

உடனே இந்த சீடர் அவர் காலிலே விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு புறப்பட்டார். குருநாதர் பெயரைச் சொல்லிக் கொண்டே போகிறார். அவர் போகிறதைப் பார்த்த சிலபேர் மறுபடியும் குருவிடம் ஓடி வந்தார்கள்.

"குருவே... இப்போ சிறிது முன்னால் உங்களிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போனானே ஒரு ஆள்- அவன் தண்ணீர்மேலே நடந்து போய்க்கொண்டிருக்கிறான் என்றார்கள் ஆச்சரியமாக! குருவுக்கு அதைவிட ஆச்சரியம்! "என்னது! தண்ணீர் மேலே நடக்கிறானா? நம்பவே முடியவில்லையே" என்றார். உடனே புறப்பட்டு ஆற்றங்கரைக்குப் போனார். அங்கே போய்ப் பார்த்தார்..

நிஜமாகவே அந்த ஆள் தண்ணீர் மேலே நடந்து போய்க் கொண்டிருந்தார். பளிங்குத்தரையிலே நடக்கிறது மாதிரி அவர் பாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கிறார். நடு ஆற்றிலே போய் நின்று கொண்டு நடனம் வேறு ஆடுகின்றார். ஆற்றிலே இரண்டு கரையிலேயும் ஏகப்பட்ட கூட்டம். எல்லாரும் இதை அதிசயமாக வேடிக்கை பார்க்கிறார்கள்!

குரு உடனே அந்த ஆளைக் கரைக்குக் கூப்பிட்டார். அவரும் வந்து சேர்ந்தார். "என்னப்பா ரகசியம் இது? எப்படி நீ நடந்தாய் தண்ணீர் மேல்?" என்றார் குரு.

"இதில் இரகசியம் ஏது சுவாமி! எல்லாம் உங்களது அருள்தான். நீங்கள்தானே சொன்னீர்கள் "எதுவா இருந்தாலும் என் பெயரைச் சொல்லு" என்று!

அதுதான் இங்கே வந்ததும் பார்த்தேன். படகு ஏதும் கிடைக்கவில்லை. உடனே உங்களது பேரைச் சொல்லிக் கொண்டே நடக்க ஆரம்பித்து விட்டேன்" என்றான். குருவாலே இதை நம்ப முடியவில்லை!

"நமது பெயருக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா அப்படி என்று அவருக்கு ஆச்சரியம். மறுபடியும் அதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று ஆசை அவருக்கு!

"சீடனே! உன்னுடைய குரு பக்தியை மெச்சினேன். இப்போது நான் உன்னை மலை மேலேயிருந்து கீழே குதி என்றால் கூட குதித்துவிடுவாயா? என்றார். உடனே அவர் ஒரு மலைமேலே ஏறி கீழே குதித்துவிட்டார். எல்லாரும் பதறிப் போய் அவன் விழுந்த இடத்தை ஓடிப் போய்பார்த்தார்கள். அந்த சீடர் சிறிய காயம் கூட இல்லாமல் சௌக்கியமாக நின்று கொண்டிருக்கின்றார். "என்னப்பா இது. இப்ப கூட என்பேரைத் தான் சொல்லிக் கொண்டிருந் தாயா?" என்றார் குரு. "ஆமாம்!" என்றார் சீடர். "சரி அப்படி என்றால் இதிலே ஏதோ விடயம் இருக்கிறது. அதனாலே நானே சோதித்துப் பார்க்கி றேன்!" என்று சொல்லி அந்தக் குரு, பக்கத்திலே இருந்த ஒரு குளத்திலே இறங்கி தண்ணீர் மேலே நடக்கிறதுக்கு அடி எடுத்து வைத்தார். அவ்வளவுதான்.

"திடீர்!" என்று உள்ளே போய்விட்டார். தண்ணீரைக் குடிக்க ஆரம்பித்து விட்டார். எல்லாரும் கரையிலே நின்று கொண்டு 'கத்த ஆரம்பித்து விட்டார்கள். உடனே இந்தச் சீடரே அமைதியாகத் தண்ணீர் மேலே நடந்து போய் குருவினது கையைப் பிடித்து கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தார். "என்ன ஆச்சு சுவாமி உங்களுக்கு?" என்றார். "என்னை மன்னித்துவிடப்பா நான் உண்மையான குரு இல்லை. நான் ஒரு போலி ஆசாமி!" அப்படி என்றார் குரு. "அது எப்படி? நீங்கள் போலி என்றால். உங்கள் பெயருக்கு இவளவு சக்தியா?" என்றார் இவர். இப்ப அந்தக் குரு சொல்கிறார்:

"அப்படி இல்லையப்பா! என் பெயரிலே ஒன்றுமே இல்லை. இந்த அற்புதங்களைச் செய்தது. என்னுடைய பெயர் இல்லை! உன்னுடைய நம்பிக்கை என்றார். "தான் சொன்னதை சந்தேகப்படாமல் முழுசாக நம்பினாய் அந்த நம்பிக்கைதான் உன் சக்திக்குக் காரணம்!" என்றார். "உனக்குச் சொன்னதை நான் நம்பவில்லை. என்னையும் நான் நம்பவில்லை அதனாலேதான் தண்ணீரிலே முழுகிப் போனேன்! நான் உனக்கு குருவாக இருக்கத் தகுதி இல்லாதவன். என்னை மன்னித்துவிடு என்று சொல்லி புறப்பட்டுப் போயிட்டாராம்! இந்தக்கதையிலேயிருந்து என்ன தெரியுது? நாம் வைக்கிற நம்பிக்கை இருக்கு பாருங்கள். அதுதான் நமக்குக் குரு! இந்தக் காலத்துக் குரு ஒருத்தர் சீடனிடம் சொன்னார்:

"எப்ப பார்த்தாலும் என் காலடியிலேயே உட்கார்ந்திருக்கிறியே என்னப்பா காரணம்?" என்று கேட்டார்.

டி "நம்பிக்கை தான் காரணம்!" என்றார் சீடன். "என்ன நம்பிக்கை?" என்றார் குரு. அதுக்கு அந்த சீடன்.

"என்னைக்காவது ஒருநாள் நீங்கள் மண்டையைப் போடுவீங்கள். சீடடிலேதான் உட்காரலாம் என்னும் நம்பிக்கைதான் குருவே! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், கைத்தொலைபேசிகள், சவள்கள், கோடரிகள் மற்றும் இதரபொருட்கள் என்பன எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலத்திற்கான நடைமுறைகளை நீதிமன்றில் பதிவாளர் வெளியிட்டுள்ளார். அதன்பிரகாரம் பகிரங்க ஏல விற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டும்.

குறித்த ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும்.

கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# போதைப் பொருட்களுடன் யாழில் 23 பேர் கைது

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த மூன்று தினங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 23 பேர் போதைப் பொருட்களுடன் கைதாகி இருப்பதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் 360 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் 6 பேரும், 500 போதை மாத்திரைகளுடன் 8 சந்தேக நபர்களும், மாவா கலந்த 2 கிலோ 820 கிராம் கஞ்சாவுடன் 2 சந்தேக நபர்களும், 560 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3சந்தேக நபர்களும், 153கிராம் கஞ்சாவுடன் 4சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-30)

# தெற்குக் கடலில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்

## ஐ.ம.ச வேட்பாளர் கைது

(கொழும்பு)

நாட்டின் தெற்கு கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் பன்னலவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள் ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 100 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 200 |
| தக்காளி | 200 | 200 | 250 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 120 | 220 |
| கோவா | 180 | 200 | 250 | 180 |
| கரட் | 250 | 300 | 250 | 220 |
| பூசணி | 60 | 50 | 80 | 50 |
| புடோல் | 120 | 120 | 300 | -- |
| வாழைக்காய் | 100 | 50 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 350 | 200 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 200 | 180 |
| பாகற்காய் | 600 | 400 | 1400 | 700 |
| வெண்டக்காய் | 150 | 120 | 300 | 120 |
| கருணைக் கிழங்கு | -- | 200 | 250 | -- |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 350 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 160 |
| பீற்றூட் | 300 | 120 | 250 | 180 |
| கறிமிளகாய் | 600 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 1500 | 800 |
| போஞ்சி | 450 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 120 | 150 | 140 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | -- |
| தேசிக்காய் | 1700 | 600 | 600 | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 160 | 150-200 | -- |
| இராசவள்ளி | 400 | 500 | 800 | -- |
| வெங்காயப்பூ | 600 | -- | 600 | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 250 | -- |
| பொன்னாங்காணி | 100 | 100 | 60 | -- |
| வல்லாரை | 60 | 50 | 80 | -- |
| ஈரப்பலா | 150 | 120 | 200 | -- |


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்- இலங்கை
## கலைப்பீடம்

**பட்டப்பின் கல்வித்தகைமை டிப்ளோமா பரீட்சைகள் - 2025**
**(முழு நேரம் மற்றும் பகுதி நேரம்)**

மேற்படி டிப்ளோமா பாடநெறியின் (முழு நேரம் மற்றும் பகுதி நேரம்) முதலாம் வருட முதலாம் அரையாண்டுக்கான மீள் பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் உரிய மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 28.11.2025 இற்கு முன்னர் கலைப்பீடப் பீடாதிபதி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**பதிவாளர்.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
(C-4387)


# இராசிபலன்

**22.11.2025**
**கார்த்திகை 06, சனிக்கிழமை**
**துதியை பிற்பகல் 4.14 மணிவரை**

**கேட்டை பிற்பகல் 4.33 மணிவரை**
**சுப நேரம் 3.10-4.40 மணிவரை**
**இராகுகாலம் 9.10-10.40 மணிவரை**

**சந்திராஷ்டமம்:**
**பரணி, கார்த்திகை.**

**வளவன்**




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், விரயங்கள் மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றலாம்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியாக ஏற்பட்ட போட்டிகள் மாறும்.




உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.




திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழித் தகவல்கள் ஆச்சரியம் தரும், வெளியூர்த் தொடர்புகள் சிறப்பாக இருக்கும்.




கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாடு குதூகலம் தரும், கற்பனை மிகுதியான நாள்.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கடமையில் உற்சாகம் கூடும்.




பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் பெருக பெரிதும் பாடுபடுவீர்கள், கண்ணியம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**ஊசி முனையில் தவம் செய்தாலும் உள்ளது தான் கிடைக்கும்.**

noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 916





இவையெல்லாம் உண்மையா என்பதைத் தாங்களே அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்."

"கேட்க வேண்டியதே இல்லை! அவ்விதமே இருக்கும். ஆனாலும் நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து எனக்கு எதிராகச் சதி செய்கிறீர்கள் என்று நான் கூறியதிலே தவறு ஒன்றுமில்லை அல்லவா?" என்றார் சுந்தர சோழர்.

"நான் செய்த குற்றத்துக்கு மன்னிப்பு இல்லைதான் மன்னிப்பு நான் கோரவும் இல்லை. ஆனாலும் பல வருட காலமாக என் மனத்திலிருந்த பாரம் இன்றைக்கு நீங்கிவிட்டது. இனி எனக்கு விடை கொடுங்கள். திருவரங்கம் சென்று ஸ்ரீரங்கநாதருக்குச் சேவை செய்து என் நாட்களைக் கழிக்க அனுமதியுங்கள்."

அது முடியாத காரியம், பிரம்மராயரே! நீ அன்று செய்த குற்றத்தினால் இன்று எத்தனையோ குழப்பங்கள் நேர்ந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்த்து வைத்து விட்டல்லவா நீர் ரங்கநாதருக்குச் சேவை செய்யப் போக வேண்டும்? என்றார் சக்கரவர்த்தி.

### 34 ஆம் அத்தியாயம்
### இராவணனுக்கு ஆபத்து!

சுந்தர சோழர் தமது செல்வக் குமாரியைப் பார்த்துக் "குந்தவை! நான் முதன்மந்திரியோடு இராஜ்ய காரியங்களைப் பற்றிக் கொஞ்சம் பேச வேண்டும். நீங்கள் போய் உங்கள் காரியங்களைப் பாருங்கள். போகும்போது இதையும் அழைத்துக் கொண்டு போங்கள்! உன் தாயார் மட்டும் இங்கே சிறிது நேரம் இருக்கட்டும்!" என்றார்.

சக்கரவர்த்தி "இதையும்" என்று குறிப்பிட்டது மந்தாகினியைத்தான். அப்படிக் குறிப்பிட்டதிலிருந்து அவள் விடயத்தில் அவருடைய அருவருப்பு வெளியாயிற்று.

குந்தவை சிறிது ஏமாற்றத்துடன் தந்தையை நோக்கினாள். அதைக் கவனித்த சக்கரவர்த்தி, "ஆமாம், இவள் முட்டிக் கொண்டது சிற்ப மண்டபத்திலுள்ள கைலாச மலைதானா என்பதைத் தெரிந்து கொள்வது நல்லது! இவளை அங்கேயே அழைத்துக் கொண்டு போய்க் காட்டித் தெரிந்து கொள்ளுங்கள்! இவள் இங்கே நிற்பதை என்னால் சகிக்க முடியவில்லை" என்றார்.

குந்தவை ஏமாற்றம் நிறைந்த முகத்தோடு மந்தாகினியைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். அப்போது மலையமான் மகள் குந்தவையின் அருகில் வந்து, அவள் காதில் மட்டும் கேட்கும்படியாக, "குழந்தாய்! இவள் இப்போது பார்க்கச் சகிக்காமல்தானே இருக்கிறாள்? அப்பாவிடம் வருத்தப்படுவதில் என்ன பயன்? உன்னுடைய அலங்காரக் கலைத் திறமையையெல்லாம் இவளிடம் காட்டு பார்க்கலாம்!" என்றாள். குந்தவை புன்னகை மூலம் தன் சம்மதத்தைத் தெரிந்துவிட்டு அங்கிருந்து மந்தாகினியை அழைத்துச் சென்றாள். அவர்களுடன் வானதியும் பூங்குழலியும் வெளியேறினார்கள்.

பிறகு சுந்தர சோழர் முதன் மந்திரியையும் மலையமான் மகளையும் மாறி மாறிப் பார்த்தவண்ணம், "நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து இந்தக் காரியத்தை எதற்காகச் செய்தீர்கள் என்று தெரியவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பொது அறிவு இல்லாதவன்



ஒரு ஊரில் ஒரு பண்ணையார் இருந்தார். அவருக்குச் சொத்துக்கள் ஏராளமாக இருந்தன.

பண்ணையாருக்கு ஒரே ஒரு பெண்தான்! ஆனால், அந்தப் பெண் ஆணைப் போலவே வளர்ந்தாள். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றாள். மேலும், கலை, இலக்கியம், இசை ஆகிய வற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தாள்.

பெண்ணுக்குத் தகுந்த மாப்பிள்ளை தேட முயற்சி எடுத்தார் பண்ணையார். வரக் கூடிய மாப்பிள்ளை தன் வீட்டோடு இருக்கக் கூடியவனாகப் பார்த்தார்.

பல மாதங்களாக, பல ஊர்களில் பார்த்தும், எதுவும் பொருத்தமாக அமையவில்லை. எவனுமே மாமனார் வீட்டில் தங்கும் மாப்பிள்ளையாக வர விரும்பவில்லை.

பக்கத்தூரில் பையன் ஒருவன் இருந்தான். அவனுக்கு தாய், தகப்பன் இல்லை. கல்லூரியில் படிக்க வசதி இல்லை. சிற்றப்பன் வீட்டில் தங்கி இருந்தான். அவன் வேலை தேடியும், விண்ணப்பம் போட்டுக் கொண்டும் இருந்தான்.

பண்ணையார் அவனைப் பற்றி விசாரித்தார். "அவன் ஏழையாக இருந்தாலும், பரவாயில்லை, அவனையே ஏற்பாடு செய்து, பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து அவனை வீட்டோடு வைத்துக் கொள்ளலாம்" என்று சிலர் கூறினார்கள்.

அந்த ஏழை இளைஞனுக்கு தன் பெண்ணை திருமணம் செய்து வைத்தார் பண்ணையார்.

அந்த இளைஞனும் மாமனார் வீட்டில், மனைவி சொல்வதைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருந்து வந்தான்.

பண்ணையார் காசிக்கு யாத்திரை சென்றார். ஒரு நாள், பாடகர் ஒருவர், தம் குழுவினருடன் பண்ணையார் வீட்டுக்கு வந்தார். "ஊர்தோறும், செல்வந்தர் வீடுகளில் பாடுவது வழக்கம்" என்றார்.

"பண்ணையார் யாத்திரை சென்றுள்ளார், எனக்கு இசையில் விருப்பம் இல்லை. நீங்கள் பண்ணையார் வந்த பிறகு வரலாம்" என்றார் மாப்பிள்ளை.

பாடகர் வருத்தத்தோடு, புறப்படத் தயாரானார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.
– சுவாமி விவேகானந்தா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மதவாதம் பிடித்த பிக்குகளை சிங்கள மக்கள் தூக்கி எறிவர்

கௌதம புத்த பிரானின் போதனைகளைப் பின்பற்றுகின்ற எவரும் மனித குலத்துக்கு ஈனமான காரியத்தைச் செய்யமாட்டார்கள்.

இங்கு புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுபவர்கள் என்று நாம் கூறுவதை எவரும் புத்த பிக்குகள் என்று நினைத்துவிடாதீர்கள்.

மாறாக, புத்தபகவானின் போதனைகளைப் பௌத்தர்கள் மட்டுமல்ல, உயிர்கள் மீது அன்பு கொண்ட எவரும் அவர் தந்த போதனைகளைப் பின்பற்றுவர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் புத்தபகவானின் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு, துறவு பூண்ட சிலர் அரக்கத்தனத்தோடு செயற்படுகின்றனர்.

ஆம், பௌத்த பிக்குகள் சிலர் கோபாவேசமாகக் கதைப்பதைப் பலரும் காணொளிகள் மூலமாகப் பார்த்திருப்பர்.

அதைப் பார்த்தவர்களுக்கு நன்கு தெரியும் அந்த பிக்குகளிடம் இறைபக்தி – மனிதநேயம் – உயிர்களிடத்து அன்பு என எவையும் அறவே இல்லை என்பது.

உண்மை. சில புத்தபிக்குகள் சண்டித்தனத்துடன் செயற்படுகின்றனர். சில வேளைகளில் கைஓங்குகின்றனர். அதிலும் பொலிஸாருக்கு கைவைக்கின்ற அளவில் அவர்களிடம் மமதை பொங்கிப் பீறிடுகிறது.

பௌத்த துறவிகளின் இத்தகைய செயற்பாடுகளை மனிதநேயமுள்ள எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆம், காவிதரித்த பௌத்த துறவிகள் சிலர் இனவாதத்தை – மதவாதத்தை கொட்டித்தள்ளி அதன்மூலம் மக்கள் மத்தியில் பிரபலமடைய முற்படுகின்றனர். ஆனால் அது ஒருபோதும் சாத்தியப்படப் போவதில்லை.

மாறாக, மதவாதத்தைப் பரப்பி அதனூடு இனவாதத் தீயை மூட்டி மனித குலத்தை கொன்று குவிக்கத் திட்டம் தீட்டுகின்ற புத்த பிக்குகளுக்கு எதிராக; கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுகின்ற தூய்மையான பௌத்த துறவிகள் கருத்துரைக்கத் தலைப்பட்டுவிட்டனர்.

உண்மையில் இது இந்த நாட்டில் ஏற்பட்ட மிகப் பெரிய மறுமலர்ச்சி எனலாம்.

அத்துடன் மதவாதப் பௌத்த பிக்குகளை சிங்கள மக்களும் எதிர்க்கத் தயாராகியுள்ளனர்.

ஆக, இனவாதம் – மதவாதம் பேசி மனிதக் குருதியைக் குடிக்க பௌத்த பிக்குகள் முற்படலாம். ஆனால் இனி அவர்களின் பருப்பு அவியப் போவதில்லை.

மாறாக, சம்பந்தப்பட்ட பிக்குகள் தங்களின் கௌரவத்தை இழக்கப் போகின்றனர். துறவிகளுக்கான மரியாதையைக் கெடுக்கப் போகின்றனர். சிலவேளைகளில் தகைமையற்ற பிக்குகளை பொதுமக்கள் நையப்புடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இது விரைவில் சாத்தியப்படலாம்.

# மட்டக்களப்பு தொல்லியல் போர்வையில் தமிழர் நிலங்களை அபகரிக்க முயற்சி!

## புதிய பெயர்ப்பலகைகளால் வெடித்தது சர்ச்சை

மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளிலும் திடீரெனத் தொல்லியல் இடம் என மும்மொழிகளில் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டமையால் தமிழர்களின் பூர்வீக நிலத்தை "தொல்பொருள் ஆய்வு" என்ற போர்வையில் கையகப்படுத்துவதற்கான திட்டமா? எனப் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

தொல்பொருள் எனும் போர்வையில் நேற்று முன்தினம் படுவான்கரைப் பெருநிலம், மண்முனை தென்மேற்கு பிரதேச பிரிவிலுள்ள தாந்தாமலை முருகன் ஆலயத்தில் செல்லும் வீதிகளில் இரு இடங்களில் நேற்று தொல்பொருள் திணைக்களத்தால் அறிவித்தல் பலகை இடப்பட்டன.

நேற்று வெல்லாவெளி கண்ணபுரம் பகுதியில் தொல்லியல் இடம் என மும்மொழிகளில் எழுதப்பட்ட புதிய பெயர்ப்பலகை தொல்பொருள் திணைக்களத்தினால் நாட்டப்பட்டதால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை உருவாகியது.

இச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்த அப்பகுதி அரசியல்வாதிகள் மற்றும் மக்கள் பெயர்ப்பலகையை நாட்டவிடாமல் தடுத்துள்ளனர்.

இந்நிலையில் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை நிறுவும் திட்டமாக இந்த விளம்பர அறிவிப்புக்கள் இடப்பட்டுள்ளதா? என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-7)

## தாந்தாமலை தொல்லியல் பலகை திருமலைச் சம்பவத்தின் நீட்சியா?

### பா.அரியநேத்திரன் கடும் சந்தேகம்

(தாந்தாமலை)

திருகோணமலையில் அத்துமீறி புத்தர் சிலைவைக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக தொல்பொருள் இடங்கள் என அடையாளப்படுத்தி பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு - படுவான்கரைப் பெருநிலம், மண்முனை தென்மேற்குப் பிரதேச பிரிவிலுள்ள தாந்தாமலை முருகன் ஆலயத்திற்குச் செல்லும் வீதிகளில் இரு இடங்களில் நேற்று முன்தினம் தொல்பொருள் திணைக்களத்தால் அறிவித்தல் பலகை இடப்பட்டுள்ளன.

அதில் தாந்தாமலை தொல்லியல் இடம் என மூன்று மொழிகளாலும் எழுதப்பட்ட அறிவித்தல் பலகை தாந்தாமலை செல்லும் நாப்பது வட்டை சந்தியில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை அம்புக்குறி காட்டி போடப்பட்டதுடன் மற்றைய அறிவித்தல் பலகை தாந்தாமலை முருகன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள பொலிஸ் சாவடி நிலையச் சந்தியில் தாந்தாமலை முருகன் ஆலயத்தை அம்புக்குறியிட்டு காட்டப்பட்டுள்ளது.

இது தாந்தாமலை தமிழரர்களின் பூர்வீக நிலத்தில் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை நிறுவும் திட்டமாக இந்த விளம்பர அறிவிப்பு இடப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது என்றார். (ம-7)

## வரம்புமீறி அதிக வட்டி வசூலிக்கும் நுண்கடன் நிறுவனங்களுக்கு ஆப்பு

### வலி.மேற்கு பிரதேச சபை அதிரடித் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேச சபைக்குள் செயற்படுகின்ற நுண்கடன்களை வழங்குகின்ற நிதி நிறுவனங்கள் அனைத்தும் அடுத்தாண்டு முதல் சபையின் அனுமதியைப் பெற்றே இயங்க வேண்டும்.

அனுமதித்த அளவை விட அதிகளவு வட்டி அறவிட்டால் அனுமதி உடன் இரத்துச் செய்யப்படும் என்ற தீர்மானம் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற மாதாந்த அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த அமர்வில் நுண்கடன் விடயம் தொடர்பான பிரேரணையை முன்மொழிந்த தவிசாளர் ஜயந்தன் அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

நிதி நிறுவனங்கள் ஏற்கெனவே மத்திய வங்கியில் பதிவுபட்டாலும் கூட எமது பிரிவான வலிகாமம் மேற்கு பகுதிக்குள் உள்ள நிதி நிறுவனங்களைக் கையாள வேண்டிய தேவை எங்களிடம் உள்ளது.

நுண்கடன் நிதி நிறுவனங்களின் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. அவர்கள் எங்களிடம் அனுமதிகள் எடுக்கின்றார்கள். இருந்தாலும் அதிகளவான வட்டி வீதங்களை அவர்கள் அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.


இதற்கு எதிரான நடவடிக்கைகள் வெவ்வேறு பிரதேச சபைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மத்திய வங்கியின் வட்டி வீதங்களை மீறாது செயற்படுமிடத்து அவர்கள் எமது பிரதேச சபை எல்லைக்குள் செயற்படுவதற்கான அனுமதியை 2026 ஆம் ஆண்டிலிருந்து கொடுப்பது என்றும் குடிபுகுதல் சான்றிதழை அந்த நிறுவனமானது கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தையும் இந்தச் சபையில் எடுப்பதற்காக இப்பிரேரணையை சமர்ப்பிக்கிறேன் என்றார்.

தவிசாளரின் குறித்த பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவு தெரிவித்ததுடன் இவ்வாறான நிதி நிறுவனங்களால் சமூகத்தில் இடம்பெறும் தற்கொலை, மன வுளைச்சல் போன்ற பிரச்சினைகளையும் சுட்டிக்காட்டி சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போம் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில் ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்."



அல்பேட் சுவைஸ்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர்- சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

06

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சமூக முறைமை அதனோடிணைந்த சம்பிரதாய மனப்பாங்கு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கள், ஆண் -பெண் சமூக பிரதிநிதித்துவ செயற்பாடுகளின் மாற்றம், பெண்களுக்கு பொது செயற்பாடுகள் தொடர்பில் காணப்படும் குறைவான அனுபவம் மற்றும் பயிற்சி, மகப்பேற்று பொறுப்பு மற்றும் சம்பிரதாயமாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப பொறுப்புகள், குறைவான சுதந்திரம், குறைவான வாய்ப்புகள் மற்றும் சமூக மற்றும் கலாசார தடைகள் என்பன இதில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அரசியல்வாதிகள் தொடர்பாக சமூகத்தில் நிலவும் கருத்துக்கள் பெண்கள் அரசியலிற்குள் நுழைவதற்கு பெரும் தடைக்கல்லாகவுள்ளது. அத்துடன் பெண்களைப் பற்றி ஒழுக்கமாக பேசுவதற்கான ஒரு இடமாக இலங்கை அரசியல் காணப்படவில்லை.மேலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளே அவர்களின் அரசியல் பங்களிப்பை தடுக்கும் முக்கிய காரணியாக இருப்பதாக இலங்கை பாலின அடிப்படையிலான வன்முறை எதிர்ப்பு அமைப்பு கூறுகின்றது.துன்புறுத்தல், பாலியல் லஞ்சம் , மிரட்டுதல் , உடல் ரீதியாக தாக்கப்படுதல், எச்சரிக்கைகள், நிதி ரீதியான அழுத்தங்கள், எச்சரிக்கைகள், பண்பற்ற முறையிலான ஊடக தகவல்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் சேறு பூசப்படுதல் போன்றவை இந்த அமைப்பினால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

**இலங்கை அரசியல் அமைப்பு, ஆண்-பெண் பாகுபாடற்ற சமத்துவத்தை உறுதி செய்கிறது. என்றாலும், நடைமுறையில் அத்தகைய சமத்துவம் உறுதிப்படவில்லை என்பதே உண்மை.**

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடுபவர்களில் 25வீதம் பெண்களாக இருக்க வேண்டும் என 2016 பெப்ரவரியில் அரசு திருத்தச் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றியது. இந்த புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் பெண்களுக்கு 25வீதம் இட ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டது. 2018 பெப்ரவரி 10 ஆம் திகதி 24 மாநகர சபைகளுக்கும், 41 நகர சபைகளுக்கும், 276 பிரதேச சபைகளுக்குமாக மொத்தமாக 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடம் பெற்ற தேர்தலிலே இம் முறை செயற்படுத்தப்பட்டது. இத் தேர்தலில் 341 உள்ளூராட்சி சபைகளுக்கு 56066 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் 8690 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். 17000 பெண் வேட்பாளர்களும் போட்டியிட்ட போதும் இவர்களில் 1919 பேர் மட்டுமே தெரிவாகினர். 2020 ஆம் ஆண்டு தேர்தலில் எத்தனையோ விழிப்புணர்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் தீர்மானம் முற்றிலும் மாறுபட்டதாகவே அமைந்தது.

2015ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் 13 பேர் இருந்தனர். 2020 ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்ற தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்தம் 12 பேர் மாத்திரமே தெரிவாகி இருந்தனர் இவர்களில் ஐவர் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டிருப்பவர்கள். சிறுபான்மை இனங்களில் இருந்து எவருமே தெரிவு செய்யப்படவில்லை. தற்போது (2025) பாராளுமன்றத்தில் 22 பேர் இருக்கின்றனர். இவ்விபரம் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | பெண்களின் எண்ணிக்கை | ஆண்டு | பெண்களின் எண்ணிக்கை | ஆண்டு | பெண்களின் எண்ணிக்கை |
| 1931-1935 | 2 | 1970-1977 | 6 | 2004-2010 | 13 |
| 1936-1947 | 1 | 1977-1989 | 11 | 2010-2015 | 13 |
| 1947-1952 | 3 | 1989-1994 | 13 | 2015-2020 | 12 |
| 1952-1956 | 2 | 1994-2000 | 12 | 2020-2024 | 12 |
| 1960-1964 | 3 | 2000-2001 | 9 | 2024- | 22 |
| 1965-1970 | 6 | 2001-2004 | 10 | | |

**இலங்கையில் பெண்கள் வாக்குரிமை**

இலங்கையில் 1910இல் குறூமக்கலம் அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கையில் வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அல்லது கற்றோருக்கான வாக்குரிமை என அழைக்கப்பட்டது. (இது கல்வி அறிவு, சொத்து உள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது). அதன் பிரகாரம் 4% மக்களுக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. வழங்கப்பட்டிருந்த வாக்குரிமைக்குள் பெண்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

பெண்களுக்கான வாக்குரிமைப் போராட்டம், அங்கிருந்தே உருப்பெறத் தொடங்கியது. விசேடமாக, தொழிலாளர் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஏ.ஈ.குணசிங்க என்பவர், இந்த வேலைத்திட்டத்துக்கு தலைமைத்துவம் வகித்தார். ஆண் - பெண் வேறுபாடுகளின்றி, கல்வி மற்றும் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று இடதுசாரி அமைப்பொன்றினால், பாரிய வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. 1919ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், இலங்கை தேசியச் சங்கத்தில் கூட, இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்ற போதிலும் இலங்கை தேசிய சங்கத்தினால், அதற்கான வலியுறுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. பெண்களுக்கான வாக்குரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட முதலாவது அமைப்பு, இதிலிருந்தே உருவாகத் தொடங்கியது. அது "மலலிகா குலங்கன சமித்திய" என்று பெயர் பெற்றது. பெண்களுக்கான வாக்குரிமைப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, 1925ஆம் ஆண்டுக் காலப் பகுதியில், மேற்படி அமைப்பினால், இலங்கை தேசிய சங்கத்திடம் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது. இருப்பினும், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பெண்களுக்கும் கீழ் மட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும், வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று, பணக்கார அரசியல் தலைமைத்துவம் விரும்பவில்லை. இதனால் மல்லிகா குலங்கன சமித்தியின் வேலைத் திட்டங்கள், தோல்வி கண்டன.

இதற்கிடைப்பட்ட காலத்தில், அரசியல் தலைமைகள் மற்றும் பணக்கார குடும்பங்களிலிருந்த பெண்கள், அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்காக அணிதிரண்டிருந்தனர். மத்தியதரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், விசேடமாக, தொழிற்றுறைகளில் ஈடுபட்ட பெண்கள், முக்கிய ஆண் அரசியல்வாதிகளின் மனைவிமார் மற்றும் அவர்களின் உறவுமுறைப் பெண்கள் இணைந்து, 1927ஆம் ஆண்டில் "காந்தா சமதன சங்கமய" (மகளிர் கூட்டுறவு சங்கம்) உருவாக்கப்பட்டது. இதற்கு பல மட்டங்களிலிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பின.

எவ்வாறாயினும், 1928 ஜனவரி 11ம் திகதி டொனமூர் ஆணையத்தின் முன் இச்சங்கத்தைச் சார்ந்த பன்னிரண்டு பெண்கள் சாட்சியமளித்தனர். அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொண்டு, பெண்களுக்கும் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை வழங்குங்கள் என்று, கோரிக்கை விடுத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் மூச்செடு...

யாழ்ப்பாணம் வந்த பெண்ணொருவர் மூச்செடுக்க சிரமப்பட்ட நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட டொரிங்கடன் மாலினி யோகராசா (வயது-58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது குடும்பம் இத்தாலியில் நிரந்தரமாக வசித்து வருகின்றது. குறித்த நபர் யாழ்ப்பாணம் வந்து செல்வது வழமை.

குறித்த பெண் யாழ்ப்பாணம் வந்த நிலையில் கடந்த 20ஆம் திகதி காலை மூச்செடுக்க சிரமப்பட்ட நிலையில் சிறிது நேரத்தின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)






















## யாழில்...

உயிரிழந்துள்ளார்.

கேணியடிப் பிளவத்தைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் சித்தங்கேணி வடக்குப் பகுதியைச் சேர்ந்த கணேசமூர்த்தி நாகேந்திரம் (வயது-68) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்றுப் பிற்பகல் கேணியடிப் பிளவத்தைப் பகுதிக்குச் செல்வதற்காக துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தார். இதன் போது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பான மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,104)

## வயிற்று வீக்கம்...

குறித்த நபர் கடந்த புதன்கிழமை (19) அதிகாலை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் அன்று இரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (21) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7,60,104)

## மாவீரர்களின்...

பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பொது ஈகச்சுடரினை மாவீரரின் தந்தையான தம்பிராசா ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து கல்லறை உருவகத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை நினைவாலயத்தில் மாவீரர்களின் உருவப் படங்கள் சிலவும் பெற்றோரினால் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தாய் மண்ணுக்காக தம் உயிர்களை அர்ப்பணித்தவர்களுடன் மாமனிதர்களையும் நாட்டுப்பற்றாளர்களையும் மற்றும் பல ஆவணப்படுத்தல்களையும் கொண்டு இம்முறை நல்லூர் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

தலைமுறைகள் கடந்து வாழும் எம் மாவீரச் செல்வங்களின் நினைவாலயத்திற்கு உங்கள் இளைய தலைமுறையின்ரையும் அழைத்து வந்து வரலாற்றினைக் கடத்துங்கள். உங்கள் மனப்பதிவுகளைப் பதிந்து விட்டுச் செல்லுங்கள் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (ம-7,33)

## பாம்பு தீண்டிய...

உயர்தரப் பரீட்சைகள் நடைபெற்று வரும் நிலையில், நேற்று இரசாயனவியல் பாடப் பரீட்சை நடைபெற்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காகப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்ற துஸ்யந்தன் சாத்வீகன் என்ற மாணவன் பாடசாலை வளாகத்தினுள் நுழைந்த போது பாம்பு தீண்டியுள்ளது.

ஆரம்பத்தில் அதனைப்பொருட்படுத்தாத மாணவன், பரீட்சை மண்டபத்திற்குச் சென்று அமர்ந்துள்ளார்.

எனினும், பாம்பு தீண்டிய இடத்தில் குருதிப் பெருக்கு ஏற்பட்டதை அவதானித்த நிலையில், விடயம் உடனடியாகப் பரீட்சை மேற்பார்வையாளரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

உடனடியாகச் செயற்பட்ட அதிகாரிகள் நோயாளர் காவு வண்டி மூலம் மாணவனைப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு அவசர சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

சிகிச்சையின் பின்னர், மீண்டும் நோயாளர் காவு வண்டியில் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்ட மாணவன், வைத்தியர்களின் கண்காணிப்புடன் தனது பரீட்சையைத் தொடர்ந்து எழுதியுள்ளார். பரீட்சை நிறைவடைந்த பின்னர், அவர் மீண்டும் மேலதிக சிகிச்சைகளுக்காகப் பருத் தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று (22) நடைபெறவுள்ள பரீட்சைக்கும் குறித்த மாணவன் வைத்தியசாலையிலிருந்து நோயாளர் காவு வண்டி மூலமாகவே பரீட்சை நிலையத்திற்கு அழைத்து வரப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடல் உபாதைக்கு மத்தியிலும் கல்வியில் அவர் காட்டிய இந்த ஈடுபாடு பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ம-7)

## தரம்...

அடிப்படையில், 2026ஆம் கல்வியாண்டில் தரம் 6 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்குரிய பாடசாலை ரீதியான வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk இனுள் பிரவேசிப்பதன் ஊடாக, குறித்த வெட்டுப்புள்ளிகள் தொடர்பான முழுமையான விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாணவர்கள் தமது பெறுபேறுகளுக்கு ஏற்ப தமக்குக் கிடைத்துள்ள பாடசாலை எது என்பதனை அறிந்துகொள்வதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ம-7)

## அநுர அரசாங்...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் பல்வேறு எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக ஏற்பாடு செய்துள்ள எதிர்ப்புப் பேரணி நேற்று வெள்ளிக்கிழமை (21) பிற்பகல் நுகேகொடையில் நடைபெற்றது.

ஐ.தே.க.வுடன் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உருமய, ஶ்ரீலங்கா மகாஜனக் கட்சி, ஜனதா சேவக கட்சி, நவ ஜனதா பெரமுன உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் நேற்று அரச எதிர்ப்புப் பேரணியில்பங்கேற்றன.

ஆயிரக்கணக்கான பொதுமக்களும் குறித்த எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்றிருந்தனர். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்நிதியான் திருமண சேவை

special Hindu, RC, உள்நாடு, வெளிநாடு 20 வருட அனுபவமிக்க சேவையில் பதிவுக் கட்டணத்துடன் விண்ணப்பிப்போர் எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

**077 357 3055**

வல்வெட்டித்துறை (C-4385)

## சமையலாள் தேவை

சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள கூல் வாறிற்கு றொட்டி,றைஸ் மற்றும் பலகாரங்கள் போடக்கூடிய சமையல் ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-4388)

**077 515 7894**
**070 363 2074**

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மாவடிச்சந்திக்கு மிக அருகாமையில் கள்ளி வீதி தொடக்கத்தில் 5 பரப்பும் 16 குழியும் உடைய காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட மற்றும் தோட்ட தேவைகளுக்கு பயன்படுத்தலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும். (5985)

**077 728 6164**

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3580/-
11-16 Kg 2610/-
21-22 Kg 2380/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4389)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4389)

**V2 TRAVELS** 076 1410725 / 076 8226236
v2vacancies@gmail.com

## மணப்பெண் தேவை

01) மண்டைதீவு - கோண்டாவில், இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 54906
02) காரைநகர் - இணுவில், 1995, மகம், MBBS, B.D.S. Dental surgeon மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 53958
03) மாங்குளம், இந்து, 1994, பரணி, MBBS, FLAP Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 48027
04) பருத்தித்துறை, இந்து, 1996, சதயம், MSc in Computer Science, IT engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 40863
05) நயினாதீவு, இந்து, 1988, உத்திரட்டாதி, MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 40669
06) கரவெட்டி - புதுக்குடியிருப்பு, இந்து, 1987, மிருகசீரிடம், BSc, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07) புலோலி, இந்து, 1982, விசாகம், BSc, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 38431
08) வண்ணார்பண்ணை - சுதுமலை, இந்து, 1976, ரேவதி, MBBS Doctor, UK Citizen Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 37640
09) நீர்வேலி, இந்து, 1989, சுவாதி, Phd in chemistry, South Korea மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 36432
10) கச்சேரியடி, இந்து, 1981, Roman catholic, Masters, Business Analyst, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. - 36343

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (5973)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## 22 உடன் விற்பனைக்கு 22

01. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு முன்பாக 6 பரப்பு காணியும்
02. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 30 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்
03. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் SVM களஞ்சியசாலைக்கு முன்பாக 30 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட தனிக் கடையும்
04. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அண்மையில் 16 பரப்பு காணியும்
05. யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்பு காணியும்
06. யாழ். மின்சார நிலைய வீதியில் 6 பரப்பு காணியும்
07. யாழ். மின்சார நிலைய வீதி, பழைய தபால் கந்தோர் வீதியில் 6 பரப்பு காணியும்
08. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
09. யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்பு காணியும்
10. யாழ். பிறவுண் வீதியில் 100 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட ஒரு பரப்பு காணியும்
11. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்பு காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : (C-4384)

**0777 232 535**

## பணிப்பெண் தேவை

அரசு கடமை புரியும் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலை செய்ய 18 - 30 வயதுக்குட்பட்ட தங்கி நின்று கடமைபுரிய பெண் பணியாளர் தேவை. சம்பளம் - 100,000/- சனி, ஞாயிறு விடுமுறை வழங்கப்படும். (1724)

**077 258 5564**


## குருநகரில்...

யப்பட்டுள்ளனர்.


மேற்படி போதைப்பொருட்கள் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனையாகவிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சென விரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,30,33)

## மரண அறிவித்தல்

தோற்றம்: 22 - 08 - 1938



மறைவு: 20 - 11 - 2025

### சிங்காரவேலு சிவக்கொழுந்து

செட்டித்தெரு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரவேலு சிவக்கொழுந்து அவர்கள் கடந்த (2025.11.20) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிங்காரவேலு அவர்களின் பாசமிகு மனைவியும் சிவலிங்கராசா (திருகோணமலை), சிவலட்சுமி (கெங்கா - இந்தியா), சிவலோகநாதன் (அதிபர் - கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), செந்தில்குமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலேந்திரன் (இந்தியா), மதிவதனி (திருகோணமலை), விஜயறஜினி (ஆசிரியை, யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்), கிருத்திகா (நடன ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஜ், நிமிஷா, வர்சினி, நிரோஜினி (கார்த்திகா), சுவர்ணன், சுவேன், சுவராஜ், நிதுர்ஜன், சிவகுமார், கிரிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹர்சிகா, நிஹரிகா, ஹேக்ஷித், யக்ஷிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.11.2025) சனிக்கிழமை மு.ப 9.00 மணியளவில் இல.77, புங்கன் குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

077 634 3692
077 087 0728

தகவல்: குடும்பத்தினர் (C-4386)


## சுபமாங்கல்யம் திருமண சேவை

உங்களது எதிர்பார்ப்புகளுக்கேற்ப பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை எம் திருமண சேவையினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு
071 932 7425
Palaly Road, Thirunelveli.
www.subamangalyam.com
(5979)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 224/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 258/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 150/= | Max 10Kg |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 239/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 237/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 197/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 254/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பயறு | - 690/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 975/= | |
| 1Kg கறுப்பு கௌப்பி | - 1290/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= ~~70~~ | |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1727)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.